முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 661**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

21.07.2021, புதன்கிழமை

1. ஆறுமுக ஞானியே எந்தன் அவதாரமே
அறமாக அருளாக வந்த ஞான தேசிகனே
ஏறுமுகம் மக்கள் அடையவேண்டி
ஏழாம்படை வீடு படைத்து அருளுகின்ற தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெளிவுபட ஞான அறிவுரை ஆசி தன்னை
ஆசி  தந்து பிலவ நள்ளி திங்களில் உரைப்பேன்
அரங்கனே நீ எந்தன் மகா சூட்சுமம்
3. சூட்சுமம் தாங்கி சுத்த நெறிபட இந்த உலகத்தை
சுத்திசெய்து காக்கவே வந்த எந்தன் அவதாரம்
மாட்சிமைபட உன் அருமை இந்த உலகம் அறிந்தால்
மண்ணுலகம் சடுதி ஞானயுகமாக மாறும்
4. மாறுதலை செய்தே இந்த உலகை மீட்க
மகான் சுப்ரமணியர் யானும் இனிதே
ஆறுதல் தந்து உந்தனுள் சக்தியாய் இருக்க
அரங்கன் என்றும் ஆறுமுகனே என்றும் அழைக்கும் அன்பர்கள் அனைவருக்கும்
5. அனைவருக்கும் எந்தன் ஆசியும் அருளும் உண்டு
அனைவருக்கும் ஞானியாகும் வாய்ப்பும் உண்டு
துணைபட யான் இருந்து அருளுவதாலே
தேசிகன் உன் கரம்பட்ட மக்கள் எல்லாம்
6. மக்களெல்லாம் வினை அகன்று புனிதராகி
மண்ணுலகில் ஞானிகளாகி இந்த உலகத்தில்
ஆக்கமுடன் சேவையாற்றி அரங்கன் உன் வழி
அகிலமாற்றம் செய்து பெரும்பேறு காண்பர்
7. காண்கவே ஓங்காரக்குடில் நோக்கி
கலியுக மக்களே வருதல் வேண்டும்
உண்மை ஆன்மீகம் அருளுகின்ற உயர் ஞானி
அரங்கனை குருவாக கலியுகத்தின் கடவுளாக எண்ணி
8. எண்ணியே இனிதே என் நாமஜெபத்தை கூறி
இயம்பிடுவேன் சரவணச் சுடரேற்றி
எண்ணம்வழி சுத்த சைவ நெறி என்கின்ற தீர்க்கம் கொண்டு
இனிதே தொடர்ந்து அரங்கன் வழி வரவரவர

9. வருகவே வையகத்தில் மாற்றம்
வள்ளல் தன்மை கூடி இனிதே
முருகப்பெருமான் என் ஆட்சிக்குரிய காலமாக
முழுமைபட சடுதி ஞான ஆட்சிக்காலம் உதயமாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—